பத்திரிக்கை செய்தி

காலி வீட்டு மனையை அளந்து தனிப்பட்டா வழங்க ரூ.6,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சர்வேயர் கைது

புகார்தாரர் திரு.முருகன், பந்தாரப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் சர்வே எண்.117/6பி1எ1ல் உள்ள தனது காலி வீட்டு மனையை அளந்து தனிப்பட்டா வழங்க இணைய சேவை மூலமாக விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ராமசந்திரன், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் திரு.வளையாபதி, சர்வேயர், குருபரப்பள்ளி வருவாய் கிராமம், கிருஷ்ணகிரி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தங்களுக்கு ரூ.6,000/- லஞ்சமாக தர வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 07.11.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ராமசந்திரன், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் திரு.வளையாபதி, சர்வேயர் அவர்கள் லஞ்ச பணம் ரூ.6,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.